அ.வ.எண்.64/2022 நாள்: 04.02.2026

வா.சா.1 திருமதி.சீத்தாலெட்சுமி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களது சொத்தை அனுபவிக்கவிடாமல் பிரதிவாதிகள் பிரச்சனை செய்வதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது முதல்விசாரணை வாக்குமூலம் எனது வழக்கறிஞர் தயார் செய்ததில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ஆமாம், அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் ஆமாம். தாவா சொத்து ஆதியில் யாருக்கு சொந்தமானது என்றால் அய்யருக்கு சொந்தமானது ஆகும், அந்த அய்யர் பெயர் என்ன என்றால் ஞாபகம் இல்லை.

2) தாவா சொத்தை எனக்கு யார் எழுதிக்கொடுத்தது என்றால் எனது கணவர் எழுதிக்கொடுத்தார். எனது கணவர் எனக்கு எப்போது தான செட்டில்மென்ட் எழுதி வைத்தார் என்றால் 07.02.2002–ல் எழுதி வைத்தார். 1ஆம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால் அவர் யார் என்று எனக்கு தெரியாது. 2ஆம் பிரதிவாதியை எனக்கு என்ன உறவு என்றால் அவரும் எனக்கு யார் என்று தெரியாது. தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அதன் விஸ்தீரணம் என்ன என்றால் 4 மா (1 ஏக்கர்) ஆகும். எனது மாமனார் பெயர் என்ன என்றால் வெங்கிடுசாமி ஆகும்.

3) எனது மாமனார் 1ஆம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 20.07.2010 அன்று ரூ.1,94,400/–ஐ 1ஆம் பிரதிவாதியிடமிருந்து எனது மாமனார் பெற்றுக் கொண்டு 216 குழி நிலத்தை பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது மாமனாருக்கும் 1ஆம் பிரதிவாதிக்குமிடையே என்ன உறவு என்றால் உறவினரல்ல. எனது மாமனாருடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் உடன்பிறந்தவர்கள் யாரும் இல்லை. வெங்கிடுசாமி, துரையய்யா, சின்னன்னா ஆகியோர் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

4) எனது மாமனார் வெங்கிடுசாமி, சின்னன்னா மனைவி வசந்தா என்பவரிடம் ரூ.1,00,300/– பெற்றுக் கொண்டு கடந்த 20.07.2010 அன்று பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் 112 குழி நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. மேற்படி வசந்தா என்பவரிடமிருந்து 1ஆம் பிரதிவாதி மேற்படி 112 குழி நிலத்தை 22.07.2017–அன்று ரூ.2,00,000/–பணம் கொடுத்து பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் இல்லை. 2ஆம் பிரதிவாதியை ஏன் இந்த

வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் எனது நிலத்தை விலைக்கு கேட்டார் நான் தரமறுத்துவிட்டேன், அதனால் அவரை வழக்கில் சேர்த்துள்ளேன்.

5) பிரதிவாதிகளுக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் ஏதாவது கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் வழக்கு சொத்தில் பயிர் செய்யவில்லை என்றாலும், 1ஆம் பிரதிவாதிதான் சாகுபடி செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல, எனது அனுபவத்தில்தான் உள்ளது. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லப்படும் ஆவணம் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எனது கணவர் எனக்கு செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

6) தாவா சொத்தை 1ஆம் பிரதிவாதி உரிய தொகை கொடுத்து வாங்கி அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், அவரிடமிருந்து சொத்தை அபகரிப்பதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் தாவா சொத்து ஆதியில் எனது கணவருக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

1ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/ Seethalakshmi

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.04 17:08:12 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU